முருகப்பெருமான் துணை

**மகான் கடைப்பிள்ளைச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.01.2024,** திங்கட்கிழமை

1. ஞான சபை படைத்து அருளும்
   ஞானியே ஆறுமுக அரங்கனே
   வானவர்கள் போற்றும் அண்ணலே
   வள்ளலே வாழுகின்ற ஞானியே
2. ஞானியே உன்பெருமை கூறி
   ஞாலமதில் சோபகிருது சிலை திங்கள்
   இனிமைபட மூவையோர் திகதி சோமவாரம்
   (சோபகிருது வருடம் மார்கழி மாதம் 16 ம் நாள், 01.01.2024, திங்கட்கிழமை)
   இயம்பிடுவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை கடைப்பிள்ளைசித்தர் யானும்
   அருளுவேன் உலக நலம்பெற
   ஆசிதந்து அரங்கன் காட்டும்
   அறநெறி உயர்நெறி ஆகும்
4. ஆகவே உலகமக்கள் ஏற்று
   அரங்கா முருகா என வேண்டி
   வகைபட வணங்கி தீட்சை
   வரமாக வடிவேலனே வருகின்ற
5. வருகின்ற மகாமந்திர தீட்சையை
   வல்லமைபட ஏற்று மக்கள்
   பெருமைபட செபதபம்காண
   பேதமிலா ஞானவான்களாகத் தேறி
6. தேறியே உலக மாற்றமே தரும்
   தெய்வ சக்திகளாக நிரம்பி
   பெருமை மிக்க பாரதம் முதல்
   பேருலகம் எங்கும் அரங்கன் நெறி

7. அரங்கன் நெறி பரவி நின்று
அற்புதம் நிகழக் கூடும்
வரங்களாக அன்னதான சேவை
வல்லமையும் கண்டடைந்து
8. அடைந்துமே அவரவர் சுயதேவை
அளவிலா பூர்த்தி கண்டு
தடையின்றி பொது சேவையிலும்
தன்னார்வத் தொண்டர்களாகச் சிறந்து
9. சிறந்து கலியில் மாற்றம்
சித்தர்கள் மகாசக்திகள் தானும்
பரந்த வெளிகளில் வெளிப்பட
பழுதின்றி ஞானத் தலைமையும்
10. தலைமையும் உருவாகி இனிதே
தரணி நல்லாட்சி காணும்
ஊழல் லஞ்சம் இல்லாத
உழைப்புக்கு கடமைக்கு எதிர்பார்ப்பு
11. எதிர்பார்ப்பு பொருள் பற்றுவழி
இயங்குகின்ற எல்லா நிலையும்
மேதினியில் வருங்காலம் கடந்து
முருகப்பெருமான் ஆசி பெற்ற நல்லாட்சி மலரும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—